# மொபிடெல் தனது பதிவு/மீள் பதிவு செயன்முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஆகஸ்ட் 03, 2008

தேசிய சேவை வழங்குனரான ஸ்ரீ லங்கா ரெலிகொம் மொபிடெல் தனது வாடிக்கையாளர்களுக்கு பதிவு/ மீள பதிவு செயன் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. கையடக்க தொலைபேசி சந்தாதாரர்கள் அனைவரும் தத்தமது வலையமைப்புடன் பதிவு செய்து கொள்ளல் வேண்டுமென்றும், பாதுகாப்பு படையினரால் அல்லது பொலீஸ் உத்தியோகத்தர்களினால் வேண்டப்படுமிடத்து அவர்கள் தம்வசமுள்ள SIM இன் உரிமையை நிருபிக்க வேண்டும் என்றும் இலங்கை தொலைத்தொடர்பாடல் ஒழுங்குறுத்து ஆணைக்குழு பணிப்புரை விடுத்துள்ளது.

அணைத்து மொபிட்டல் வாடிக்கையாளர்களுக்கும் தமது SIM / SIM களையும் தேசிய அடையாள அட்டை / செல்லுபடியாகும் கடவுசீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்துடன் எமது 65 மொபிட்டல் நிலையங்களில் எந்தவொரு நிலையத்திலும் பதிவு / மீள்பதிவு செய்து கொள்ள வசதிசெய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிலையங்களிலும் பயிற்றுவிக்கப்பட்ட சேவையாளர்களுடன் வாடிக்கையாளரை டிஜிட்டல் புகைப்படமெடுக்கும் வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. இப்புகைப்படம் பின் MMS மூலம் எமது மத்திய தரவுத்தளத்திற்கு அனுப்பிவைக்கப்படும். எமது நிலையங்களில் புகைப்படமெடுக்க விரும்பாத வாடிக்கையாளர்கள் தங்களுடைய புகைப்படத்தை கொண்டு வந்தால் அதை பரீட்சித்து பின் scan செய்து தரவுத் தளத்திற்கு அனுப்பிவைக்கப்படும். தேசிய அடையாள அட்டையை வைத்திராத சிறுவர்கள் மொபிட்டல் இணைப்பை பெறவிரும்பினால் அல்லது பாவனையில் வைத்திருந்தால் அவர்கள் தமது பெற்றோர் அல்லது பாதுகாவளருடன் எமது நிலையத்திற்கு பிரசன்னமாகி தமது SIMஐ பெற்றோா அல்லது பாதுகாவலரின் பெயரில் பதிவு / மீள் பதிவு செய்து கொள்ளலாம்.

பதிவு / மீள்பதிவு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட பின் வாடிக்கையாளர்களுக்கு குறுந்தகவல் (SMS) மூலம் உறுதிப்படுத்தப்படும். பின்னர் எந்நேரமும் வாடிக்கையாளர்கள் தங்களுடைய SIMஇன் பதிவு விபரங்களை #132# க்கு அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் மொபிட்டல் டிஜிட்டல் சான்றிதழ் (MDC) வடிவில் பெற்றுகொள்ளலாம். பதிவு / மீள்பதிவு நிறைவு பெற்றவுடன் வாடிக்கையாளருக்கு தற்காலிக மொபிட்டல் அடையாள அட்டை (MIC) வழங்கப்படும். நிரந்திர மொபிட்டல் அடையாள அட்டை (MIC) காலக்கிரமத்தில் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். சிறுவர்களாயின் MICயில் அச்சிறுவனின் / சிறுமியின் புகைப்படமும் பதிவு செய்யப்பட்ட பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயரும் காணப்படும்.

இதன் முக்கியத்தை பற்றி பேசுகையில் ஸ்ரீ லங்கா டெலிகொம் மொபிட்டலின் தலைவி திருமதி லீசா டி சில்வா சந்திரசேன அவர்கள் “ தேசிய சேவை வழங்குனராக நாம் இலங்கை

தொலைதொடர்பாடல் ஒழுங்குறுத்து ஆணைக்குழுவின் பணிப்புரையின் படி 100% நிறைவேற்ற தீர்மானித்துள்ளோம். ஆகையால் நாம் மொபிட்டல் அடையாள சான்றிதழ் அல்லது MIC எனும் அச்சிடப்பட்ட உரிமைச் சான்றிதழுடன் பாவணையாளரால் இலகுவில் பயன்படுத்தக்கூடிய மொபிடெல் டிஜிடெல் சான்றிதழையும் வழங்குவோம்" என கூறியுள்ளார்.

மேலும் அவர் "இவ்வாய்ப்பின் மூலம் மொபிட்டெல் சமூகத்திற்கு உச்சபயனை பெற்றுகொள்ளுமாறு நாம் ஊக்குவிப்பதோடு இதை ஒரு அசௌகரியமாக அவர்கள் கருதமாட்டார்கள் என நாம் நம்புகின்றோம்" என கூறினார்.


තාවකාලික මොබිටෙල් හඳුනාගැනීමේ සහතිකය
தற்காலிக மொபிடெல் அடையாள சான்றிதழ்
Temporary Mobitel Identification Certificate

නම
பெயர்
Name ______

ජා.හැ.ප./ගමන් බලපත්‍ර/රියදුරු බලපත්‍ර අංකය / தேஅஅ /கடவுச்சீட்டு / சாரதி
அனுமதிப் பத்திர இல. NIC /PP /DL No. ☐☐☐☐☐☐☐☐☐☐

මොබිටෙල් අංකය
மொபிடெல் இல. 071 ☐☐☐☐☐☐☐
Mobitel No.

සිම් අංකය
சிம் இல.
SIM No. ______

දිනය/ திகதி / Date ______

ஸ்ரீ லங்கா டெலிகொம் மொபிட்டலின் நிறைவேற்று அதிகாரியான திரு.சுரேன் அமரசேகர அவர்கள் கூறுகையில் "புகைபடத்தை வாடிக்கையாளரின் புறத்தோற்றத்துடன் ஒப்பிடும் போது எமது வாடிக்கையாளர் சேவை வழங்குனர்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கலாம். இதனால் வாடிக்கையாளரின் புறத்தோற்றம் தேசிய அடையாள அட்டையின் புகைபடத்துடன் பொறுந்துவதை பொறுட்படுத்தாது நாம் அனைத்து வாடிக்கையாளரினதும் டிஜிட்டல் புகைப்படம் எடுப்பதை உள்ளடக்கியுள்ளோம். வாடிக்கையாளர்கள் எமது நிலையத்தில் இலவசமாக புகைப்படம் எடுக்கும் வசதி செய்யப்பட்டுள்ளதோடு எமது நிலையங்களில் புகைப்படம் எடுக்க விரும்பாதவிடத்து அவர்களுடைய புகைப்படம் ஒன்றை எடுத்து வரவும் முடியும். எடுக்கப்பட்ட டிஜிட்டல் புகைப்படம் அல்லது scan செய்யப்பட்ட

புகைப்படம் எமது நவீன 3.5G HSPA அகன்றபட்டை இணைப்பு மூலம் தரவு தளத்திற்கு அனுப்பிவைக்கப்படும”. அவர் விபரிக்கையில் “இவ்வாறு செய்வதன் மூலம் காகிதங்கள், புகைபட இரசாயணங்கள், களஞ்சியப்படுத்தல் போன்றவற்றிற்கான முக்கியமற்ற பாவனைகள் குறைக்கப்படுவதால் எமது சூழலுக்கும் நன்மை பயற்கின்றது” என கூறினார்.

“அனைத்து நிலைமைகளையும் கருத்தில் கொண்டு ஒரு முழுமையான செயன்முறையின் மூலம் இதை நாடு முழுவதும் செயற்படுத்துவதே எமது நோக்கமாகும். இச்செயற்பாட்டின் ஒரு பகுதியாக படிப்படியான தகவல்களை கொண்ட ஒரு முழுமையான அறிவுருத்தல் தொகுதியொன்றை எமது அணைத்து முகவர்கள், சந்தைப்படுத்தும் அதிகாரிகள், மற்றும் சில்லரை வியாபாரிகளுக்கும் வழங்க இருக்கின்றோம்”.

உங்கள் மொபிட்டல் இணைப்பில் பதிவு/மீள்பதிவு இலவசமாக மேற்கொள்ளலாம். அதற்கு நீங்கள் செய்யவேண்டியது

- மொபிட்டல் நிலையத்திற்கு நீங்கள் பிரசன்னமாகுதல் ;
- உங்கள் தேசிய அடையாள அட்டை / சாரதி அனுமதிப்பத்திரம் / செல்லுபடியாகும் கடவுச்சீட்டு கொண்டுவருதல் ;
- புகைப்படம் எடுக்க தயாராக வருதல் விரும்பாவிடில் கடவுச்சீட்டளவு வர்ணப்புகைப்படம் கொண்டுவருதல் ;
- உங்கள் மொபிட்டல் SIM / SIMகளை கொண்டுவருதல் ;
- சிறுவர்கள், பெற்றோர் / பாதுகாவளருடன் பிரசன்னமாகியிருத்தல்.

**ஸ்ரீ லங்கா டெலிகொம் மொபிட்டெல் பற்றிய விபரம்**

தேசிய மொபைல் சேவை வழங்குனரான ஸ்ரீ லங்கா டெலிகொம் மொபிட்டல், ஸ்ரீ லங்கா டெலிகொமின் கிளை நிறுவனமாகும். ஜனவரி 2004ல் இந்நிறுவனம் EDGE/ GPRS வசதி கொண்ட 2.5G GSM dual band வலையமைப்பில் செயற்பட ஆரம்பித்தது. டிசம்பர் 2007ல் இந்நிறுவனம் தெற்காசியாவில் முதன்முறையாக 3.5G HSPA நவீன வலையமைப்பில் இணைந்துகொண்டது. 3.5G / 2.5G வலையமைப்பு சேவை வழங்களுக்காக இன்றுவரை அமெரிக்க டொலர் 275 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளதோடு 2008ன் முதல் பாகத்தின் முடிவில் இதன் 1000ற்கு மேற்பட்ட Base stations ஐ 1500 ஆக அதிகரிக்க முடிவு செய்துள்ளது.